பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 03 2026 SATURDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பெட்ரோலியப் பொருட்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. நடப்பு பருவத்தில் 3 கோடியே 3 ஆயிரம் டன் அளவிற்கு கோதுமை கொள்முதல் செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

4. நேபாள நாடாளுமன்ற தேர்தலில் 28 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள RSP கட்சி 90 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

5. சிங்கப்பூர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Likhita Srivastava - Sonali Singh இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மக்கள் மருந்தக தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மக்கள் மருந்தகங்கள் மூலம், கோடிக்கணக்கான மக்கள் பயனடைந்து வருவதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவ செலவுகளை இந்த மருந்தகங்கள் வெகுவாக குறைத்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வெளியிட்டுள்ள செய்தியில், நாடுமுழுவதும் 18 ஆயிரம் மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் நாள்தோறும் 15 லட்சத்திற்கு மேற்பட்டோர் பயனடைந்து வருவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

நகர்ப்புறங்கள் மட்டுமின்றி ஊரகப் பகுதிகளிலும் இந்த மருந்தகங்கள் செயல்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிகிச்சைக்கான செலவினங்களை குறைப்பதில் இந்த மருந்தகங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த மருந்தகங்கள் மூலம், 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மக்களுக்கு சேமிப்பு கிடைத்துள்ளதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த மருந்தகங்கள் பெரிதும் பயனளிப்பதாக தமிழகத்தின் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த மருந்தாளுநரும், பயனாளியும் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 44 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மேற்காசியாவில் பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில், பெட்ரோலியப் பொருட்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கச்சா எண்ணெய் 40 நாடுகளிலிருந்து கொள்முதல் செய்யப்படுவதாக பெட்ரோலியத் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

குறைந்த விலையில் கச்சா எண்ணெய் விநியோகம் செய்யும் நாடுகளுடன் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெட்ரோலியப் பொருட்கள் கையிருப்பு தொடர்பாக தவறான செய்திகள் பரப்பப்படுவதாகவும், இதனை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்றும் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

மானியம் இல்லா சமையல் எரிவாயு விலை, சிலிண்டருக்கு 60 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி, தில்லியில் ஒரு சிலிண்டரின் விலை 913 ரூபாயாக உள்ளது.

இதேபோல், மும்பையில் சிலிண்டரின் விலை 912 ரூபாய் 50 காசாகவும், சென்னையில் 928 ரூபாய் 50 காசாகவும், கொல்கத்தாவில் 939 ரூபாயாகவும் உள்ளது.

வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலையும் சிலிண்டருக்கு 115 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நடப்பு பருவத்தில் 3 கோடியே 3 ஆயிரம் டன் அளவிற்கு கோதுமை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

புதுதில்லியில் இதுதொடர்பாக மாநில உணவுத்துறை செயலர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

>>>>><<<<<

புதிய யூனியன் பிரதேசங்களை உருவாக்க, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வெளியான செய்திகள் தவறானவை என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

பீகார் மற்றும் மேற்குவங்கத்தின் ஒரு சில பகுதிகளைக் கொண்டு, யூனியன் பிரதேசங்கள் உருவாக்கப்படும் என்று சமூகவலைதளங்களில் வெளியான செய்திகள் உண்மைக்கு மாறானவை என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

கேரள சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து, தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.

கொச்சியில் இதுதொடர்பாக அரசியல் கட்சித் தலைவர்களுடன் இக்குழுவினர் ஆலோசனை மேற்கொண்டனர்.

இக்கூட்டத்தில் பேசிய திரு. Gyanesh Kumar, கேரளாவில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற்றதாக கூறினார்.

தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுக்க, உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அரசியல் கட்சி பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் வலியுறுத்தினர்.

>>>>><<<<<

குஜராத்தில், பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர் Govind Parmar மாரடைப்பால் காலமானார், அவருக்கு வயது 72.

அவரது மறைவிற்கு பிரதமர், மத்திய அமைச்சர்கள் மற்றும் பிஜேபி நிர்வாகிகள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

முறையான பயிற்சி, நேர மேலாண்மை மற்றும் தன்னம்பிக்கையுடன் குடிமைப்பணி தேர்வை எதிர்கொண்டால் வெற்றி நிச்சயம் என்று இந்த தேர்வில் தேசிய அளவில் இரண்டாம் இடம் பிடித்த, தமிழகத்தைச் சேர்ந்த ராஜேஸ்வரி சுவி கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - ராஜேஸ்வரி சுவி 60 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தெலங்கானாவில் பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதற்காக 99 நாட்கள் இயக்கத்தை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

இதன்படி, வார்டுகள் வாரியாகவும், கிராமங்கள் வாரியாகவும் கூட்டங்கள் நடத்தப்பட்டு, பொதுமக்களின் குறைகள் களையப்படும் என்று தெலங்கானா அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஜூன் மாதம் 12ஆம் தேதிவரை இந்த இயக்கம் நடைபெறும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நேபாள நாடாளுமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள், தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.

165 தொகுதிகளுக்கு நடைபெற்ற வாக்குப்பதிவில், 36 தொகுதிகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் RSP 28 தொகுதிகளிலும், நேபாள காங்கிரஸ் 5 தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

எஞ்சிய தொகுதிகளில் வாக்கு எண்ணும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதில் 90 தொகுதிகளில் RSP-யும், 9 தொகுதிகளில் நேபாள காங்கிரஸும் முன்னிலை வகிக்கின்றன.

>>>>><<<<<

மணிப்பூரில் 4 தீவிரவாதிகளை பாதுகாப்பு படையினர் கைது செய்துள்ளனர்.

இம்பால் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, இவர்கள் கைது செய்யப்பட்டதாக அம்மாநில காவல்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அவர்களிடமிருந்து ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஒடிசாவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

புவனேஷ்வரை ஒட்டிய புறநகர் பகுதியில், இருசக்கர வாகனம், லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

சிங்கப்பூர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Likhita Srivastava - Sonali Singh இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 23-21, 21-18 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Pitchanard Chaiwanna - Pattaraporn Rungruengpra இணையை வென்றது.

>>>>><<<<<

ஆசிய கோப்பை மகளிர் கால்பந்துப் போட்டியில், இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

ஆஸ்திரேலியாவின் பெர்த்தில் நடைபெறவுள்ள இப்போட்டி, மாலை 4.30-மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

Kalaburagi சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-3, 6-2 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Jasmijn Gimbrere-யை வென்றார்.

>>>>><<<<<